Singaporean Journal of Scientific Research(SJSR)
An International Journal (AIJ)
Vol.17.No.1 2025,Pp.82-94
ISSN: 1205-2421
available at :www.sjsronline.com
Paper Received : 04-06-2025 Paper Accepted: 07-08-2025
Paper Reviewed by: 1.Prof. S.SubramaniamYu 2. Dr.K. Rajakumaran
Editor : Dr. Chen Du Fensidal

---

# சு. சமுத்திரம் நாவல்களில் வாழ்வியல் சிக்கல்கள்

**நெறியாளர் முனைவர் ப. கோடித்துறை**
உதவிப் பேராசிரியர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**அ. ராமதாஸ்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதன் தோன்றிய நாள் முதற்கொண்டே தன்னுடைய அடிப்படை தேவைக்காக அலைந்து திரிந்து சமுதாயம் என்ற கூட்டமைப்பினை உருவாக்கியுள்ளார். ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்வியலும் ஆளுமை தன்மை மேலோங்கிக் காணப்படுகின்றன. அவ்வகையில் சு.சமுத்திரம் நாவல்களில் தனிமனிதனின் வாழ்வியல் சிக்கல்கள் சமுதாயம் சார்ந்த சிந்தனைகள் பற்றி இக்கட்டுரையின் மூலம் ஆய்வு செய்யப்படுகின்றன. இதில் முன்னுரை சு.சமுத்திரம் வாழ்க்கைக் குறிப்பு, விளிம்பு நிலைமக்களின் வாழ்க்கை நிலை, சு.சமுத்திரம் படைப்புகள் ஒரு கண்ணோட்டம் பொருளாதார ஏற்றத்தாழ்வு பாலியல் சிக்கல்கள், சாதியப்பாகுபாடுகள், அதிகார வரம்பு மீறல், அரசியல், முடிவுரை என்ற தலைப்புகளின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகின்றன. இத்தலைப்புகள் மூலம் சமுதாயத்தில் மிகவும் தாழ்த்தப்பட்ட மக்களின் விளிம்பு நிலை பெண்களின் அவளநிலையினை சு.சமுத்திரம் அணுகிய போக்கினை இன்றைய சமுதாயம் அறிந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

மனிதன் தன்வாழ்வில் அமைத்துக்கொள்கின்ற பொருளாதார கட்டமைப்பு மற்றும் பண்பாடு, கலாச்சாரம், தொழில் ஆகியவைகளில் எவ்வளவு முன்னேறினாலும் இன்றளவும் பிரிவினைகள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், பாலியல் சிக்கல்கள் என இன்றளவும் நாம் மாறவில்லை என சு.சமுத்திரம் நாவல்களில் எடுத்துக்காட்டுகின்றன என்று இவருடைய நாவல்கள் காலம் காலமாக வறுமையில் வாழும் மக்களையும் சமுதாயத்தில் பின் தங்கியுள்ள மக்களையும் அவர்கள்படும் துன்பங்கள் துயரங்கள் எண்ணற்றவை. அவற்றில் ஒரு சில பகுதிகளை மட்டும் இக்கட்டுரையின் மூலம் காணலாம்.

**சு. சமுத்திரம் - வாழ்க்கைக் குறிப்பு**

“தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று” (திருக்குறள். 236)

என்பது சான்றோர் வாக்காகும். தான் படைத்த இலக்கியத் துறையில் இறுதிவரை புகழின் உச்சத்தைத் தொட்டவராவார். இவர் தென்காசி மாவட்டம் பாவூர் சத்திர வட்டாரப் பகுதியில் உள்ள ‘திப்பணம்பட்டி’ என்னும் கிராமத்தில் 15.12.1941ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சுப்பையா நாடார், தாயார் சின்னத்தாய் ஆவார்கள். திருமணமான ஆறு மாத காலத்திலேயே தந்தையார் காலமானார், இவருடைய தாயார் ஒருநோயாளியாக இருந்த காரணத்தினால் தாய்ப்பால் உண்ண முடியாத ஒரு சூழ்நிலை உருவானது. சு.சமுத்திரம் அவர்கள் குழந்தைப் பருவத்தில் அருகில்உள்ள சேரியைச் சேர்ந்த பல தாய்மார்களிடம் பாலுண்டு வளர்ந்தார். 'பட்டக்காலிலேயே படும் கெட்ட குடியே கெடும்' என்பது வழக்கு இதற்கினங்க தன்னுடைய தாயார் காலரா நோய்த்தாக்கி காலமானார். குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களை இழந்த சு.சமுத்திரம் அவர்கள் தன்னுடைய சித்தப்பாவின் அரவணைப்பில் வளர்ந்தவராவார். ஆரம்பக் கல்வியை கடையம் என்னும் சிற்றூரிலும் மேல்நிலைக் கல்வியை பாவூர் சத்திரத்திலும் பயின்றார். தான் கற்ற ஏட்டுக்கல்வியை விட சமுதாயத்திடம் கற்றதே மிகுதியாகும். பள்ளிக்கல்வியை முடித்த சு.சமுத்திரம் அவர்கள் பட்டப்படிப்பை சர்.தியாகராயர் கல்லூரியில் பயின்று நன்மதிப்பினைப்பெற்றார். இவர் கல்லூரி அளவில் பல போட்டிகளில் கலந்து கொண்டு முதற்பரிசினைப் பெற்றவர் ஆவார். சு.சமுத்திரம் அவர்கள் தனது 27-ஆம் அகவையில் கோகிலா என்பவரை திருமணம் செய்துகொண்டார். இளமைகாலத்தில் அனைத்து சமூகத்தினரிடமும் அன்பாக பழகும் குணமுடையவராக திகழ்ந்தார்.

திருமண வாழ்க்கைக்கு பிறகு சென்னையில் நடுத்தர மக்களோடு நெருங்கிப்பழகியவர் ஆவார். அங்கு ஏற்பட்ட அனுபவமே படைப்பிலக்கியம் எழுத காரணமாக அமைந்தது.

"பி.யு.சி படிக்கும் போது, என்னைச் சென்னை நகர மாணவர்கள் "அண்ணாச்சி" என்று கிண்டல் செய்வார்கள் என்னுடைய நிறமும், போக்கும், ஆடையும் அவர்களுக்கு நேரப் போக்காக இருந்ததை அறிந்தேன், இதனால் கூனிக்குறுகிப்போனேன். கல்லூரியில் குளிரில் கூட உடம்பு வேர்த்தது. ஆனால் இந்தத் தையல் தொழிலாளரின் பரிச்சயம் ஏற்பட்ட பிறகு, பாட்டாளி மக்களின் கலாச்சாரமும், பழக்க வழக்கங்களும், எப்படி முதலாளித்துவ வர்க்கத்தாலும் பூர்ஷ்வாக்களாலும் எளனத்துக் குரியதாகவும், அடக்கி வைக்கப்படுவதற்குரியதாகவும் ஆகிறது என்பதை அறிந்து தெளிந்தேன். இதனால் என்னைக் கிண்டல் செய்த மாணவர்களை துச்சமாக மதிக்கக் கற்றுக் கொண்டேன். அவர்களிடத்தில் நலிவற்ற கலாச்சாரத்தையும் சொல்லத்துவங்கினேன். இதன் விளைவு, நான் தலைவனாகிவிட்டேன். கல்லூரியில் வேலை நிறுத்தத்திற்குத் தவிர்க்க முடியாத மாணவர் தலைவர்களில் நானும் ஒருவன். அதுமட்டுமல்ல திராவிட முன்னேற்றக்கழக மாணவர்கள் 99 சதவிகிதம் இருந்த சர்.தியாகராய கல்லூரியில் நான் தமிழ் மாணவர் மன்றத் தலைவராகவும் தெர்ந்தெடுக்கப்பட்டேன். (எனது கதைகளின் கதைகள், பக் 65,66) இதன் அடிப்படையிலே சு.சமுத்திரம் அவர்களின் இலக்கிய பணி தொடங்கியது என்று நம்மால் காணமுடிகிறது.

**விளிம்புநிலை மக்களின் வாழ்க்கை நிலை**

சு.சமுத்திரம் நாவல்களில் சமுதாயம் சார்ந்த பிரச்சனைகள் எண்ணற்றவையாகும். ஒவ்வொரு நாவலிலும் தனிமனித பிரச்சனைகள் மிகவும் மேலோங்கிக்காணப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட சமூகத்திடையே விழிப்புணர்வின்மையும், கல்வியறிவின்மையும், வறுமைநிலை, சாதிப்பாகுபாடுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் என இடம் பெற்றுள்ளன. பன்னெடுங்காலமாக சமூகத்திடையே தீர்க்க முடியாத காரணியாக அமைந்த மூடநம்பிக்கைகள் தீண்டாமை, ஜாதி பாகுபாடு என ஆசிரியர் நாவலில் சுட்டி காட்டியுள்ளார். இவையாவும் நாட்டின் வளர்ச்சிக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் தடையாக இருப்பவையாகும். சுயநலத்திற்காகவும், பதவியின் மேல்உள்ள ஆசையினாலும் மதம், ஜாதி என்ற அடிப்படையில் பிளவுகளை ஏற்படுத்தி அப்பாவிமக்களை திசை திருப்பும் நோக்கங்களை சுட்டிக்காட்டியுள்ளார். விளிம்புநிலை மக்களிடையே காணப்படும் பசி, வறுமை, ஏழ்மை, உடல் மனம் சார்ந்த பிரச்சணைகள், பாலியல் சிக்கல்கள், தொழிலாளர் பிரச்சனைகள், அடிப்படை தேவையற்ற நிலைகள், பெண்களை இழிவு படுத்துதல், உழைப்பினை சுரண்டல் அதிகார வர்கத்தினர் தன் ஆதிக்கத்தினை

பிறர்மேல் செலுத்துதல் போன்று அரசு அலுவலர்கள், காவல்துறையினர், தன்னுடைய அதிகாரத்தினை தவறாக பயன்படுத்துதல் தவறுகளை மறைத்தல் கையூட்டு பெறுதல், கொலைகள், அலுவலகப்பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் என புதினம் வழிநின்று சமுதாயத்திற்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

> “மாற்றம்… மாற்றம்… எங்கும் மாற்றம்… எதிலும் மாற்றம்… இதுதான் சமூகபரிமான வளர்ச்சி. இது தனிமனிதனுக்கும் பொருந்தும் நாமாக மாறவில்லையானால், எவராவது ஒருத்தர் அல்லது எந்த சக்தியாவது ஒன்று நம்மை மாற்றும். இதுதான் வரலாறு" (மூட்டம், பக். 70,71)

இப்புதினத்தின் வழியில் ஜாதி மதங்களைப்பற்றியும், பிரிவினை வாதிகளைப்பற்றியும் நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக உள்ள சமூகப்பிரச்சனைகளையும் காட்டியுள்ளார் சு. சமுத்திரம் அவர்கள்.

> “கிராம வாழ்க்கை மிகவும் சிக்கலானது. மனிதனின் சிறப்பை மதிக்காத சாதிக் கொடுமைகள், ஊர்க்கூட்டம் என்பது போலி ஜனநாயகம், நாட்டாண்மைக் காரரின் குடும்ப மேலாதிக்கமே சில இடங்களில் நீடிக்கிறன. ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரலும், பழைய பத்தாம்பசலி ஆதிக்கத்தை நிலை நிறுத்த முடியவில்லை என்ற பிற்போக்காளர்களின் ஆதங்கமும் சு.சமுததிரன் படைப்புகளில் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன (எனது கதைகளின் கதை, ப. 4)

**பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்**

பொருளாதாரம் மிகவும் அடிப்படைக் காரணியாக மனித வாழ்க்கைக்கு அமைகின்றன. பொருளாதார ஏற்றத்தாழ்வினால் மனிதன் தன்னுடைய சராசரி வாழ்வினை கூட வாழமுடியாமல் சமுதாயத்தில் பின் நோக்கி தள்ளப்படுகின்றன. இதன் அடிப்படைக்காரணியாக வேலைவாய்ப்பின்மையும், விழிப்புணர்வின்மையும், போதிய கல்வியறிவின்மையும், சமுதாயத்தில் முன்னேறிய செல்வவளம் படைத்தவர்கள் ஏழை எளியோர்களை அடிமைப்படுத்துதல், என ஒரே குடும்பத்தில் சகோரதர்களாக பிறந்தவர்களிடையே உள்ள வறுமைநிலை ஏற்றத்தாழ்வு குறித்து நெருப்புத்தடயங்கள் என்ற நாவலில் மாடக்கண்ணு, முத்துமாரி என்ற பாத்திரப்படைப்பு மூலம் சுட்டி காட்டியுள்ளார் சு. சமுத்திரம் அவர்கள்.

> “மாடக்கண்ணுவை, ‘தாம்புக்'' கயிற்றாலும் வாழை நாராலும் கட்டி, சரல் மேட்டில் உருட்டிப்போட்டுவிட்டு "கிழட்டுப் பயலே… கிடடா… கிட… எங்க பொன்மணி இடத்தைச் சொல்றதுவரைக்கும் ஒன்னை

> விடப்போறதில்லை இருக்கிற என்று கொக்கரித்தார்கள்" (நெருப்பு தடையங்கள், ப. 136)
>
> "அன்னக்காவடி - அனாதைக் கிழவி அப்படி பேசுவது இன்னும் நிச்சயிக்கப்படாத கல்யாணத்தின் மாப்பிள்ளையான ராஜதுரைக்கு அதிகப்பிரசங்கித் தனமாகத் தெரிந்தது" (நெருப்பு தடையங்கள், ப. 7)

என்று இச்செய்தியின்மூலம் இரண்டு சகோதரர்களுக்கு இடையேயுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வினை நாம்மால் அறிய முடிகின்றன.

தாய் தந்தை அற்ற அனாதை உறவுகள் என்று சொல்வதற்கு எவரும் இல்லை. இரயில்பயல் என்ற பாத்திரத்தினை 'நிழல் முகங்கள்' என்ற புதினத்தில் காட்டியுள்ளார். தனது வாழ்க்கையை இரயிலில் பிச்சையெடுத்து வாழ்கின்ற ஏழ்மைநிலையில் வாழும் நிலையினை ஆசிரியர் சுட்டிக்காட்டும் விதமாக அமைவனவாகும்,

> "வயதுக்கேற்ற உடம்பில்லாதவன்… ஒட்டடைக் கம்பு மாதிரியான தோற்றம், கன்னங்கரேளென்ற நிறம், எண்ணெக்கருப்பு என்பார்களே நாட்டுக் கொட்டைச் செட்டியார்களின் நிறம் அது மாதிரியான மின்னுங்கருப்பல்ல. முகம் சுழித்துப் பார்க்க வைக்கும் 'துக்கக்'ள கருப்பு பறட்டைத்தலை… ஒடுங்கிய விழித்திரைக்குள் உள்ளோடிய கண்கள்… அவன் மேனி அந்த முண்டாசுக் காரனின் இரண்டு கால்களில் பரிமானத்திற்கு இருக்கலாம். இழிபட்டகன்னங்கள், நீள வடிவான முகம்… அவன் பற்கள் கூட மெலிந்து இருப்பது போன்ற தோரணை நைந்து போன பழைய வேட்டி இடுப்புக்கு மேலே குப்பைத் தொட்டியில் கிடந்து எடுத்தது போன்ற ஒரு பணியனைப் போட்டிருந்தான் நூல் கற்றை விட அழுக்கை அதிகமாகக் கொண்ட துண்டு ஒன்றை தோளில் தாறுமாறாகப் போட்டிருந்தான்" (நிழல் முகங்கள், ப. 7)

சாதாரண மனிதனின் உருவநிலை, உடை, உணவு ஆகிவகைகளைக் கொண்டு அவன் ஏழ்மை நிலையினை நம்மால் உணர முடிகின்றன அன்றைய சூழலில் வறுமை நிலையினை உணர்த்தும் பாங்கினை 'நிழல் முகங்கள்' என்ற புதினம் மூலம் இரயில்பயல் என்ற பாத்திரத்தின் வழியாக உணர்த்துகின்றார்.

**பாலியல் சிக்கல்கள்**

மனிதனின் தேவைகளில் உடல், மனம் சார்ந்த தேவைகளில் ஒன்றாக கருதப்படுபவை பாலியல் இவை ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவான ஒன்று இவை மனித சமுதாயத்திற்கு ஏற்றமுறையில் முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்டவையாக அமையவேண்டும். இவை ஆண் பெண் இருவருக்கும்

விரும்பியவாறு அமைதல் வேண்டும், ஆனால் ஆணாதிக்கத்தினால் பெண்களின் மனம் ஏற்காதவகையில் பாலுணர்வு சிக்கல்கள் நடைபெறுகின்றன.

பாலியல் கொடுமைகள் பற்றி 'ஒரு கோட்டுக்கு வெளியே' என்ற புதினத்தில் பொருளாதாரத்திலும், சமுதாயத்திலும் மிகவும் பின் தங்கிய பெண்களை தங்களின் இச்சைக்கு பலியாக்குகின்றன.

“மொத்தத்தில் குடித்துக் கெட்டும் கெட்டுக் குடித்து கெட்டு நொறுங்கிப் போன சேரியென்று ஊர்களால் கைவிடப்பட்ட பகுதி அது அதே நேரத்தில் மேல் சாதிகள் அவ்வப்போது வந்து பட்டை தீட்டிக்கொள்ள" வசதியாக இருக்கும் இடமும் இதுதான் (கோ.வெ.ப.140) தான் கூறவந்த கூற்றினை "பட்டைதீட்டிக்கொள்ளுதல்” என குறிப்பாக காட்டியுள்ளார். பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானதை ஆசிரியர் இதன் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இளம் வயதில் கணவனை இழந்த பெண் கருணை அடிப்படையில் அலுவலகத்தில் பணியில் சேருகின்றாள். வாணி என்ற பாத்திரம் அங்கு அலுவலக மேலாளரால் பாலியல் தொல்லைக்கு ஆளாக்கப்படுகின்றாள். இக்கொடூர செயலை சு.சமுத்திரம் அவர்கள். 'வெளிச்சத்தை நோக்கி' புதினம் விழியாக சுட்டிக்காட்டியுள்ளார்.

> “அடடே! என்னம்மா இது. இப்படியா அழுகிறது. நீ அழுதால் எனக்கும் அழுகை வரும்போல் இருக்கே. அழாதம்மா என்று வார்த்தைக்கு வார்த்தை அம்மா, அம்மா என்று சொல்லிக் கொண்டே அவளுக்குப் பின்புறமாகச் சென்று அவளை மார்போடு சேர்த்து அனைத்தப்படி முகத்தை நிமிர்த்தி அவள் கண்களைத் துடைத்தார். அவள் எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் நின்றபோது மேலும் தன் மார்புடன் நெருக்கிக் கொண்டே உனக்காக ரொம்ப வருத்தப்படுகிறேன். டோன்ட் ஒரி சாயங்காலமாய் எல்லோரும் போனபிறகு ரெண்டு பேருமாய் அந்தப் ஃபைலை தேடலாம் என்றார். (வெளிச்சத்தை நோக்கி, ப. 57)

மேலாளர் தன்னுடைய பதவியின் அதிகாரத்தினாலும் ஆதரவற்ற நிலையினை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு ஒரு பெண்ணைக் கலங்கப்படுத்தும் செயலாகும். வாணி மேலாளரின் நடத்தையினை 'மனித மிருகம் கொண்ட உணர்வு' என சுட்டிக்காட்டுகின்றார். அலுவலகங்களில் பணிபுரியும் பெண்ணின் அவளநிலையினை உணர்த்துகின்றார் என்று நம்மால் காணமுடிகின்றன.

**சாதி அடக்குமுறை**

இந்திய சமுதாயத்தில் பல்வேறுபட்ட மதங்கள் இனங்கள் வாழ்கின்ற போதிலும் அவர்களுக்குள்ளே சாதிப்பாகுபாடு இன்றுவரை வேறுபட்டு காணமுடிகின்றன. தொழில் அடிப்படையில் பிரிந்த சமுதாயம் இன்றுவரை சாதி என்ற பாகுபாட்டால் பிரிந்து காணப்படுகின்றன. இவ்வாறுவேறுபட்ட சாதிகள் உருவாக காரணமாக அமைவன சமூக அமைப்புகளே காரணமாக அமைகின்றன. அத்தகைய சாதிய பாகுபாட்டினை சு.சமுத்திரம் அவர்கள் தம்முடைய பாத்திரப் படைப்பின் மூலம் அறிய முடிகின்றன.

> “உலகம்மையின் வீட்டுக்குப் பல ஹரிஜனப் பெண்கள் வந்து போகத் துவங்கினார்கள் ஓரளவு அமைதியும் அனுதாபமும் கொண்டிருந்த ஊர்ஜனங்கள் இதைப்பார்த்ததும் மீண்டும் கோபத்தில் தத்தளித்தார்கள். ஒரு மேல் ஜாதிப் பெண்ணோட வீட்டுக்கு பள்ளுப் பறையுங்க வருதன்னா அதுவும் ஊர்க்கட்ட மதிக்காம வருதுன்னா அது பெரிய விஷயம் இது அந்த ஊர மதிக்காம மட்டுமல்ல அவமரியாதையாகவும் நடத்தக் கூடிய செயலாகும்” (ஒரு கோட்டுக்கு வெளியே, பக். 152,153)

சமுதாயத்தில் மிகவும் தாழ்த்தப்பட்ட அடித்தட்டு மக்கள் தன்னுடன் சமமாக பழகுவதையும், சமமாக உட்கார்ந்து பேசுவதையும் நாடார் சமூகம் அவமரியாதையாக நினைத்தார்கள். சாதி அடிப்படையிலான பாகுபாட்டினையும் ஏற்றத்தாழ்வுகளையும் ஆசிரியர் தன்னுடைய படைப்பாற்றல் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவனை மனிதாபிமானத்தின் அடிப்படையில் தன்னுடைய மாட்டு வண்டியில் ஏற்றி தான் உடுத்தியிருந்த ஆடையைக் கொடுத்து உதவும் நல்ல உள்ளத்திற்கு இழிவான சொற்களால் அவர்களை கொச்சைப்படுத்துகின்றனர். தன் சமுதாயத்தினை பழித்துப் பேசுகின்றனர். இதனை 'பாலைப்புறா' நாவலில் மூக்கையன் என்ற பாத்திரத்தின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார் ஆசிரியர்.

> “எல்லாம்… இந்த மூக்கையாவால வந்த வினை ஒன்னையாருப்பா வண்டில ஏத்திக்கிட்டு வரச்சொன்னது…? கடைசியிலே ஒன் சாதிப்புத்தியக் காட்டிட்ட… பாரு… காலனி புத்திய காட்டிட்டே பாரு"
>
> மூக்கையா, தன்னை அறியாமலே வேட்டியைத் தார்பாய்த்துக்கட்டினார். பிறகு விஷயம் பூரிந்து, அதை இழுத்துப் போட்டுக்கொண்டே பதிலடி கொடுத்தார்.

"இந்தா பாரும்… எதைப் பற்றி பேசினாலும், சாதியப்பத்தி பேசாதேயும்… அப்புறம் எங்க சின்ன பயல்களை எங்களால் கட்டுப்படுத்த முடியாது… அதோட, சாதிகளப் பத்தி பஞ்சாயத்து பேசினால் ஒங்க சாதிக்குத்தான் அசிங்கம்"

இவனுக்கு திமிரைப் பாரேன்" (பாலை புறா, ப. 327)

ஒரு சமூகத்தின் அடக்குமுறை அதிகாரம், ஆணவப்போக்கு ஆகியவைகளை தனது புதினம் மூலம் காணலாம்.

**அதிகார வரம்பு மீறல்கள்**

அரசு பணியினை தவறாக பயன்படுத்துதல், அதற்குரிய எல்லையை மீறல் என,

"கண்ணையாவின் தலையை அமுக்கி கம்பியின் மேல் உட்காரவைத்தார் ஐந்து நிமிடம் அமர்த்தப்பட்ட கண்ணையா வலி தாளாமல் நெளிந்த போது நெளிந்த இடமெல்லாம் சவுக்கடி வைந்த இடமெல்லாம் லத்திக்குத்து ஆனாலும் கண்ணையா உயிருக்கு மிஞ்சியது எதுவும் இல்லை. எதுவும் இல்லை என்று மனத்துக்குள் சொல்லிக்கொண்டிருந்தான். காவல்துறையின் கொடுமைகளை கண்மையணயா என்ற பாத்திரம் மூலம் குறிப்பிட்டுள்ளார்" (சத்தியா ஆவேசம், ப.347)

தன்னுடைய அதிகாரத்தினை தவறான வழிகளில் அடித்தட்டு மக்களின் மேல் தினிக்கும் போக்கினைக் காட்டுகின்றன.

குடும்ப வளர்ச்சிக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் எதிராக நிற்பவை கள்ளச்சாராயம் ஆகும். இவை குடும்பத்தை அழித்து எதிர்கால சமுதாயத்தை அழிக்கும் வல்லமை பெற்றவை. கள்ளச்சாராயம், காய்ச்சுவோர்கள் எதிர்கால சமுதாயத்தினை அழிக்கும் சமூகச் சீரழிவாளர்களாகக் கருதப்படுவார்கள். இவற்றை காய்ச்சுவது தடை செய்யப்பட்டவை என்று தெரிந்தும் காவல்துறையினரிடம் இனக்கமான உறவினை வைத்துக்கொள்கின்றனர். இவற்றினை விளக்கும் வகையில் மூட்டம் என்ற புதினத்தின் வாயிலாக நாம் அறியவரும் கூற்று.

"இந்தக் காலத்துல தொழில்னாலே அது கள்ளச்சாராயந்தான்… போலீசைக் கைக்குள்ளே போட்டுக்கிட்டு காய்ச்ச ஆரம்பிச்சுட்டா… போலீசே நம்ம கைக்குள்ளே போட்டுக்கனும்னு நினைக்கிற அளவுக்கு காசும் சம்பாரிச்சுடலாம். பெரிய மனுசனாவும் ஆயிடலாம். ஆனா இதுல்லாம் தங்குமா?" (மூட்டம், ப. 54)

காவல்துறையினர் தம் கடமையில் இருந்து தவறும் போது ஒரு எதிர்கால சமுதாயம் அழியக் காரணமாக அமைகின்றன. அவற்றை விளக்கும் வகையில் 'மூட்டம்' என்ற புதினத்தின் வாயிலாக சமுதாயத்தினை நல்வழிக்கு கொண்டு செல்லும் கருத்தாக அமைகின்றன.

அரசு அலுவலர்கள் தான் செய்த தவறுகளை மறைக்கவும், அரசியல்வாதிகளின் தவறுகளுக்கு துணைபோகவும் பதவியை பயன்படுத்துகின்றன. இந்நிலையில் தாமோதரன் என்ற பாத்திரம் காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றுகின்றார். உடன் பிறந்த சகோதரன் செய்தகொலை, ஒரு பெண்ணுக்கு செய்த கொடுடரச்செயல்கள் எண்ணற்றவை.

> “பிரேத பரிசோதனை ரிப்போர்ட் இன்னும் பூர்த்தியாகவில்லை. எப்.ஐ.ஆர் நீக்குபோக்காக நிரப்பப்பட்டுள்ளது. கலாவதிக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற 'பாஸிட்டிவ்' மனிதாபிமானத்துடனும், 'டிபார்ட்மெண்ட் மேன்' குடும்பத்தைக் காட்டிக்கொடுக்கக்கூடாது. என்ற 'நெகட்டிவ்' மனிதாபிமானத்துடனும் முழுப் பூசணிக்காயை, தன்னந்தனியாய் தாங்கள் மட்டுமே மறைக்கக்கூடாது என்ற ராஜதந்திரத்துடனும், காவல்நிலையத்தினர், தங்களிடம் தவம் கிடக்கும் லோகல் லீடர்களிடம், ஒரு யோசனை சொன்னார்கள்: அதுதான் பஞ்சாயத்தார் தீர்ப்பு” (நெருப்பு தடையங்கள், ப. 173)
>
> “டுமீல்... டுமீல்... டுடுடு... டுமீல் டுமீல்
>
> “சுடுங்கடா! என்னோடு சேர்ந்து எத்தனைபேரை வேண்டுமானாலும் சுடுங்கடா! சுட்டுத் தொலைங்கடா! தன்மானத்தை விட்டுக்கொடுத்து, நாங்க சுதந்திரத்தை அனுபவிக்கத் தயாராய் இல்லை. உம்... சுடுங்கடா! காலம் ஒங்களை சுடுமுன்னால் எங்களை காலனிடம் அனுப்புங்கடா!” (நெருப்பு தடையங்கள், ப. 293)

அங்கு நடக்கும் கொலைகளுக்கும் அப்பாவிமக்கள் மீது நடத்தப்படும் துப்பாக்கி சூடு, அப்பாவிப் பெண்ணிற்கு சூடு போட்ட சமூகவிரோதிகள் அரசியல் வாதிகளுக்கும், காவல்துறையினருக்கும் உள்ள நெருக்கம் பற்றி 'நெருப்புத்தடயங்கள்' என்ற புதினம் மூலம் அறியப்படுகின்றன.

**அரசியல்**

அரசியல்வாதிகள் தங்களுக்கு ஏற்படும் நெருக்கடி நிலையினை மாற்றிக்கொள்ளவும். தன்னுடைய தவற்றினை மறைக்கவோ மக்களை திசை திருப்பும் செயலாக வன்முறையினை தூண்டுகின்றனர். தனது அரசியல் செல்வாக்கினை

பயன்படுத்தி மக்களை நிலை குலையச் செய்கின்றனர். அவ்வகையில் ஒரு சில அரசியல் வாதிகளின் பின் புலன்களாக சு.சமுத்திரம் அவர்கள் 'வாடாமலர்' புதினத்தின் வாயிலாக காட்டியுள்ளார்.

> “இது என்ன ஒரே ரத்த வாடை… எடுக்குழிபோல் பினக்குவியல்கள் கருகிப்போன தேகங்கள் பாதி வெந்த உடம்புகள் வயிற்றிலுள்ள மரணக் காயங்கள் தெரியாமல் சிரிப்பது போல் குப்புற கிடந்த குழந்தைகள், நிர்வாணமாய்க் கிடந்த பெண்கள் ஆங்காங்கே வாசல்களை இழந்த கடைகள் அங்குமிங்குமாய்ச் சிதரிக்கிடந்த விலை உயர்ந்த பொருட்கள். ஒரு லத்திக் கம்பு கூட இருந்திராத சூன்யம் ஆங்காங்கெ கழுகுகள் வட்டமடித்தன. காகங்கள் கொத்திக் கொண்டிருந்த மனித சதை மேடுகள்… உறைந்த ரத்தக் கட்டிகள்… முண்டம் முண்டமாய்… தலை… தலையாய்… (வாடா மல்லி, பக். 310, 311)

அரசியல் தலைவர்கள் தங்களுடைய பதவியை தக்கவைத்துக் கொள்ளவும் அப்பாவி மக்களின் மனதில் தன்னுடைய எண்ணங்களை வளர்த்துக் கொள்ளவும் பல அப்பாவி மக்களை பலி கொடுக்க வேண்டியுள்ளது. இதனை நாவலாசிரியர் 'வாடாமலர்' புதினம் மூலம் உணர்த்துகின்றார். மக்களாட்சி மான்பினை குளைக்கும் செயலாக வாக்குரிமையை விலைக்கு வாங்கும்.

> “மாமா! அடுத்த தடவ நீரு யூனியனுக்கு சேர்மனா நிக்கனும். எங்க குடும்பத்து ஓட்டு ஒமக்குத்தான்… நான் நன்கொட வெணுமின்னாலும் பிரிச்சித் தாரேன்" என்றான். யூனியன் சேர்மனாக நிற்கலாமா என்று அப்போதுதான் யோசித்த பஞ்சாயித்துத் தலைவர் குட்டாம்பட்டியிலும் இதர சுற்றுப்பறங்களிலும் துட்டு கொடுக்காமலே ஓட்டுகளை வாங்கிக் கொடுக்குமளவிற்கு செல்வாக்குள்ள மெட்ராஸ் மாப்பிள்ளைக்கு இருபது ரூபாய் ‘கும்புடு கட்டு’ கொடுக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்கள்” (சோற்று பட்டாளம், ப. 122)

மக்கள் நலனிற்காக பாடுபட வேண்டிய அரசியல் தலைவர்கள் தங்களுடைய சுய நல போக்கினையும், ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள வேண்டிய நிலையில் ஆட்சியாளர்கள், வாக்கிற்காக அன்றைய பொழுதில் கொடுக்கும் பணமே முடிவு செய்கிறது. ஐந்தாண்டு கால மக்கள் நலனை அன்றைய ஒருநாள் பொழுதில் அடகுவைக்கும் ‘சோற்றுப்பட்டாளம்’ புதினம் மூலம் அறியமுடிகின்றன.

**முடிவுரை**

சமுதாயத்தில் ஒவ்வொரு நாளும் நடக்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வு அதிகார வரம்பு மீறல், சாதி அடக்குமுறை, பாலியல் சிக்கல்கள், அரசியல் சார்ந்த தவறுகள் போன்றவை வரும் காலங்களில் தீர்க்கப்படும் வகையில் புதினங்களைப் படைத்துள்ளார் சு. சமுத்திரம் அவர்கள்.

பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள அடிதட்டு மக்களின் வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் புதினத்தினை படைத்துள்ளார். சமுதாயத்தில் பெண்களின் அவலநிலை, அலுவலகப் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் வன்கொடுமைகளை தீர்ப்பதற்கு வழிவகை செய்துள்ளார். காவல் துறையினரால் அடித்தட்டு மக்களின் மீது ஏவப்படும் துன்புறுத்தல்கள், உயிரிழப்புகள் போன்றவைகளுக்கு தீர்வு காணப்படுகின்றன.

பதவி மற்றும் அதிகாரத்தினை தவறான முறையில் பயன்படுத்துவோரை கண்டித்தும், சுட்டிக் காட்டியும், தண்டனை பெறுவதையும் இக்கட்டுரையின் மூலம் காணமுடிகின்றன.

**சான்றெண் விளக்கம்**

1. திருவள்ளுவர், திருக்குறள், 236
2. சு.சமுத்திரம், எனது கதைகளின் கதைகள், ப.65,66 (ஆர் நல்லக்கண்ணு அணிந்துரை)
3. சு.சமுத்திரம், மூட்டம், பக். 70,71
4. சு.சமுத்திரம், எனது கதைகளின் கதைகள், ப. 4
5. சு.சமுத்திரம், நெருப்புத்தடயங்கள், ப. 136
6. மேலது., ப. 7
7. சு.சமுத்திரம், நிழல் முகங்கள், ப. 7
8. சு.சமுத்திரம், ஒரு கோட்டுக்குவெளியே, ப. 140
9. சு.சமுத்திரம், வெளிச்சத்தை நோகச்கி, ப. 57
10. சு.சமுத்திரம், ஒரு கோட்டுக்கு வெளியே, பக். 152, 153
11. சு.சமுத்திரம், பாலைப்புறா, ப. 327
12. சு.சமுத்திரம், சத்திய ஆவேசம், ப. 347
13. சு.சமுத்திரம், மூட்டம், ப. 13
14. சு.சமுத்திரம், நெருப்புத்தடயங்கள், ப. 173
15. மேலது., ப. 293
16. சு.சமுத்திரம், வாடாமலர், பக். 310,311
17. சு.சமுத்திரம், சோற்றுப்பட்டாளம், ப. 122

**துணை நூற்பட்டியல்**


| | | |
|---|---|---|
| சு.சமுத்திரம் | - | ஒரு கோட்டுக்கு வெளியே<br>மணிவாசகர் பதிப்பகம்<br>சென்னை<br>இ.ப.1992 |
| சு.சமுத்திரம் | - | வாடாமல்லி<br>வானதி பதிப்பகம்<br>சென்னை<br>இ.ப.1997 |
| சு.சமுத்திரம் | - | இல்லந்தோறும் இதயங்கள்<br>மணிவாசகர் நூலகம்<br>சிதம்பரம்<br>மு.ப.1982 |
| சு.சமுத்திரம் | - | சத்திய ஆவேசம்<br>மணிவாசகர் பதிப்பகம்<br>சிதம்பரம்<br>மு.ப.1985 |
| சு.சமுத்திரம் | - | நெருப்புத்தடயங்கள்<br>மணிவாசகர் பதிப்பகம்<br>சிதம்பரம்<br>மு.ப.1985 |
| சு.சமுத்திரம் | - | மூட்டம்<br>ஏகலைவன் பதிப்பகம்<br>இ.ப. 2000 |
| சு.சமுத்திரம் | - | நிழல் முகங்கள்<br>ஏகலைவன் பதிப்பகம்<br>சென்னை<br>இ.ப. 2000 |
| சு.சமுத்திரம் | - | சோற்றுப் பட்டாளம்<br>கங்கை புத்தக நிலையம்<br>13, தீனதயாலு தெரு,<br>தியாகராய நகர் |

சென்னை - 600 017

சு.சமுத்திரம் - பாலைப்புறா
ஏகலைவன் பதிப்பகம்,
9, இரண்டாவது குறுக்குத் தெரு
டாக்டர் ராதா கிருஷ்ணன் நகர்
சென்னை - 600 041

சு.சமுத்திரம் - வெளிச்சத்தை நோக்கி
மணிவாசகர் பதிப்பகம்
சிதம்பரம் மு.ப. 1987

சு.சமுத்திரம் - எனது கதைகளின் கதைகள்
ஆர். நல்லகண்ணு
அணிந்துரை

சு.சமுத்திரம் - எனது கதைகளின் கதைகள்
ஏகலைவன் பதிப்பகம்
9, இரண்டாவது குறுக்குத்தெரு
டாக்டர் ராதாகிருஹ்ணன் நகர்
சென்னை 600 041